**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 300** **நாள் : 06.10.2025**

**தேசிய மாசு தடுப்பு தினத்தை முன்னிட்டு, சென்னை மெரினா கடற்கரையில் கடலில் எண்ணெய் கசிவு ஏற்படும் நிகழ்வுகளில் கரையோரத்தில் எண்ணெய் அகற்றுவதற்கான மாதிரி பயிற்சி இன்று (06.10.2025) நடைபெற்றது.**

தேசிய மாசு தடுப்பு தினத்தை முன்னிட்டு, இன்று (06.10.2025) சென்னை மெரினா கடற்கரையில் இந்திய கடலோர காவல் படை, பெருநகர சென்னை மாநகராட்சி, மாநில பேரிடர் மேலாண்மைத் துறை, தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம், தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை, தீயணைப்புத்துறை, மீன்வளத்துறை, சென்னை துறைமுக நிர்வாகம், எண்ணெய் தொழில் தொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் சர்வதேச பார்வையாளர்களுடன் ஒருங்கிணைந்து, கடலில் எண்ணெய் கசிவு ஏற்படும் நிகழ்வுகளில் கரையோரத்தில் எண்ணெய் அகற்றுவதற்கான மாதிரி பயிற்சி இந்திய கடலோர காவல்படை பொது இயக்குநர் அவர்களின் மேற்பார்வையில் நடைபெற்றது. இதில் மாநகராட்சி அலுவலர்களின் தலைமையில் 200க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள், PPE கருவிகளுடன் கரையோர மீட்புப் பணியில் பங்கேற்றனர்.

இன்று (06.10.2025) காலையில் நடைபெற்ற கடல்சார் பயிற்சியில், இரண்டு கப்பல்களின் மோதல் சம்பவம் மாதிரியாக அமைக்கப்பட்டு, எண்ணெய் கசிவு நிகழ்த்தப்பட்டு, கடலோர காவல்படை கப்பல்கள், மாசுக் கட்டுப்பாட்டு படகுகள், ஹெலிகாப்டர்கள், விமானங்கள் ஆகியவற்றை பயன்படுத்தி எண்ணெய் கட்டுப்படுத்தும் மற்றும் மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. இதற்காக தடுப்பு திரைகள், எண்ணெய் உறிஞ்சும் கருவிகள், இரசாயனத் தடுப்புகள் போன்றவை பயன்படுத்தப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, மாலையில் நடைபெற்ற கரையோர / கடற்கரைப் பயிற்சியில் எண்ணெய் கசிவு கடற்கரையை அடைந்ததாகக் கருதப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் மாநில துறைகள் கடலோர காவல்படையுடன் இணைந்து கரையோரத்தில் எண்ணெய் நீக்கும் மாதிரி செயலை நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் இந்தப் பகுதிகளில் மண்தடுப்பு, திரை, தடுப்பு குழாய்கள் அமைத்து தடுப்பு நடவடிக்கைகள், உறிஞ்சல், தோண்டுதல், சுத்திகரிப்பு உபகரணங்கள் மூலம் எண்ணெய் சேகரிப்பு நடவடிக்கைகள், சுத்திகரிப்பு / இயற்கை நிலையை மீட்டல் மற்றும் சுற்றுச்சூழல் அனுமதி பெற்ற முறையில் கழிவுகளை அகற்றுதல் உள்ளிட்ட நிலைகளில் எண்ணெய் கசிவு அகற்றும் நிலைகள் மேற்கொள்ளப்பட்டன.

இத்திட்டம், இந்திய கடலோர காவல்படை தேசிய அளவில் மேற்கொண்டு வரும் NATPOLREX (National Oil Spill Disaster Contingency Plan) மாதிரி பயிற்சியின் அடிப்படையில் நடைபெற்றது. இது பல்வேறு துறைகளின் ஒருங்கிணைப்பு திறனையும் நடவடிக்கையினை வேகத்தையும் பரிசோதிக்கும் வகையில் அமைந்தது.

இந்த மாதிரி பயிற்சியானது MARPOL (International Convention for the Prevention of Pollution from Ships), OPRC Convention (Oil Pollution Preparedness, Response and Co-operation), IMO (International Maritime Organization) நடைமுறைகள் ஆகிய சர்வதேச ஒப்பந்தங்கள் மற்றும் ஐ.நா வழிகாட்டுதல்களுக்கு ஏற்ப நடைபெற்றது.

அனைத்து துறைகளின் ஒருங்கிணைப்பை பரிசோதித்தல், கப்பல்கள், ஹெலிகாப்டர்கள், விமானங்கள் மற்றும் மாசுக்கட்டுப்பாட்டு உபகரணங்களின் செயல்திறனை மதிப்பிடுதல், எண்ணெய் கசிவு சம்பவத்தின் பல்வேறு நிலைகளிலும் தகுந்த நடவடிக்கையை முன்னெடுத்து காட்டுதல், பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல் உள்ளிட்டவை இந்தப் பயிற்சியின் முக்கிய இலக்குகள் ஆகும்

இந்த மாதிரி பயிற்சியின் மொத்த பொறுப்பாக இந்திய கடலோர காவல்படையின் பொது இயக்குநர் அவர்களும், கடல்சார் நடவடிக்கைகளை இந்திய கடலோர காவல்படையும், கரையோர நடவடிக்கைகளை பெருநகர சென்னை மாநகராட்சி, மற்றும் மாநில பேரிடர் மேலாண்மைத் துறை இணைந்து, கடலோர காவல்படையுடன் ஒருங்கிணைந்தும் செயல்படுத்தியது. மேலும், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை, சென்னை துறைமுக நிர்வாகம், தீயணைப்புத்துறை, மீன்வளத்துறை, கப்பல் / எண்ணெய் கையாளும் நிறுவனங்கள், கடற்படை, விமானப்படை, சர்வதேச பார்வையாளர்கள் மற்றும் நிபுணர்கள் உள்ளிட்ட மற்ற துறைகளும் இணைந்து செயல்பட்டன.

இந்த மாதிரி பயிற்சியில் எண்ணெய் மற்றும் எண்ணெய் மணலை தற்காலிகமாக சேமிப்பதற்காக 60 டிரம்கள், 60 சின்டெக்ஸ் டேங்க்ஸ், அப்புறப்படுத்துவதற்காக 2 ஜே.சி.பி. வாகனங்கள், 2 பாப்காட் வாகனங்கள், 5 எச்.பி. திறன் கொண்ட 2 மோட்டார் பம்புகள், 2 டிராக்டர்கள், 50 மண்வெட்டிகள், 25 எச்.டி. பைகள், 10 Segregation Wing Units, கட்டுப்பாட்டு அறை, படுக்கைகளுடன் கூடிய முதலுதவி மையம், நெபுலைசர், தையல் பொருட்கள் மற்றும் தயார் நிலையில் ஆம்புலன்ஸ் வாகனம், அதிக கழிவுகளை அகற்றுவதற்காக ஹூக் பின் மற்றும் 300 மீட்டர் கயிற்றைக் கொண்ட சூப்பர் சக்கர் இயந்திரம், தண்ணீர் தொட்டிகள், கழுவும்/சுத்தப்படுத்தும் இடங்கள் மற்றும் அணுகல் பாதைகள் ஈடுபடுத்தப்பட்டது.

இந்த மாதிரி பயிற்சி பெரிய அளவிலான எண்ணெய் கசிவுகளை அகற்றுவதை நிர்வகிக்க சென்னையின் தயார்நிலையை வெற்றிகரமாக வெளிப்படுத்தியது. இது நிறுவனங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பை வலுப்படுத்தியது, தன்னார்வலர்களுக்கு சிறந்த நடைமுறைகளில் பயிற்சி அளித்தது, மேலும் கடற்கரை மற்றும் கடல் சூழலைப் பாதுகாப்பதில் நகரத்தின் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தியது. சென்னையின் கடல்சார் சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலுப்படுத்தி, சிறந்த நடைமுறைகளை உருவாக்குவதற்கு இந்தப் பயிற்சி உதவும்.

இந்நிகழ்வில் இந்திய கடலோர பாதுகாப்புப் படையின் தலைவர் (Director General ICG) திரு. பரமேஷ் சிவமணி, கிழக்கு பிராந்திய கடலோர பாதுகாப்புப் படைத் தளபதி (Regional Commander Coast Guard East) திரு.டட்விந்தர் சிங் சைனி, கடலோர காவல் படையின் மண்டல மீன்வளம் மற்றும் சுற்றுச்சூழல் அலுவலர் (கிழக்கு)( RFEO CGRHQ (E)) திரு. எஸ். பிரேம் குமார், தமிழ்நாடு தீயணைப்புத் துறை இயக்குநர் திருமதி சீமா அகர்வால், இ.கா.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் திரு. ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., மத்திய வட்டார துணை ஆணையர் திரு. எச்.ஆர். கௌஷிக், இ.ஆ.ப., மற்றும் தொடர்புடைய துறைகளின் அலுவலர்கள் 30க்கும் மேற்பட்ட நாடுகளின் பார்வையாளர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**